Q6:417
M4
176367

கடவுள் துணை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
21 MAY 1914
MADRAS

# அர்ச். சூசையப்பர் கலம்பகம்

என்னும்

திரு

# எண்ணூர்க் கலம்பகம்.

757 764
2'14

இஃது:—

நார்த்விக் காலேஜி, தமிழ்ப்பண்டிதராகிய

இராயபுரம்

வித்துவான், A. S. ஜெகராவு முதலியாரால்

செய்யப்பட்டு

ஆ. சூசை. அண்ணுதுரை அவர்களால்

அச்சிடப்பட்டது.

MADRAS

PRINTED AT THE MERCURY PRESS.

May –1914.

O6:414
N14
176367

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
21 MAY 1914
MADRAS.

கடவுள் துணை.

# அர்ச் சூசையப்பர் கலம்பகம்.

என்னும்,

திரு

# எண்ணூர்க் கலம்பகம்.

757
2-14

---

## காப்பு.

### கட்டளைக் கலித்துறை.

மறைப்பாற் கடலிற் றிருக்கன்னிச் சங்கு மகிழ்ந்தளித்த
இறைப்பாற் கடலிற் றிருமுத்தம் பூண்டு விசைத்தமிழ்ப்பாச்
துறைப்பாற் கடலிற் புனைந்தன னெண்ணூர்த் துறையவற்கே
நறைப்பாற் கடலிற் கலம்பக விந்நால் நலம்பெறவே.

## மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா.

### எட்டடித் தரவுகள், 2.

வான்றளங்கள் பணிகேட்ப வானரசர் புடைகாப்ப
மீன்றளங்க ளெவடியார் வேதியரோ டடிபணிய
யாவருல குள்ளவர்தா மார்ந்துறையக் காதலிக்குந்
தேவருல குள்ளவர்தாஞ் சேர்ந்துறையும் எண்ணூரில்
மாபுரவி வெங்கதிரோன் வழிவிலங்க மின்னிமைக்குங்
கோபுரவி சாலவெயில் கூடியசீர்ப் பொற்கோயில்
வான்பூத்த மறைப்பயனை மண்ணுலகோர் மறந்தமையான்
தேன்பூத்த மலர்க்கொடிக்கீழ்த் திருமகனை யேந்திநின்றோய்
மன்னர்தொழுஞ் சேவடியான் மாமலர்க்கை யாற்றழுவத்
தென்னர்குலக் கன்னிகையாள் திருமடியி லுயிர்துறந்தோய்
முன்னிருவர் புரிவினையான் மூடியதிவ் வுலகமெனப்
பன்னிருநல் லாண்டினிலே பருப்பதத்தின் மிசையிவர்ந்தோய்
காட்டிலுறை மெய்த்தவத்தைக் கண்டுணர்ந்தோர் வானவனுன்
நாட்டிலுறை மன்பதைக்கும் நல்கிநெறி சேர்த்துவந்தோய்
இல்லறமுந் துறவறமு மீரறமாத் தோன்றுமே
நல்லறத்துக் கன்னியொடு நானிலத்து வாழ்ந்தோய் கேள்.

## ஈரடித்தாழிசைகள், 6.

17. வேதவடி வாய்வந்த வித்தகனீ யென்றாலோ
18. போதவடி வாமுனது புகழினுக்கோ ரளவாமோ?
19. கர்ரிகையோ டேயலைந்து கானகத்து ளொருமுழைப்பால்
20. சேரினுநின் றேசினுக்குத் திணையளவுங் குறைவாமோ?
21. மன்னனெனரோ தனுக்கஞ்சி மகனையெடுத் தெசித்துநகர்
22. துன்னினைநீ யெனினுனது துகளில்வலி பழுதாமோ?
23. கோல்மலர்ந்த செயல்கண்டு கொற்றவர்வாழ்த் தினரொன்னின்
24. வேல்மலர்ந்த நின்வரத்தின் விளைவினுக்கோர் வரம்பாமோ?
25. சேயெனவேழ் மதிப்பிறவித் தீங்ககலச் செனித்தமையுந்
26. தாயெனவோர் திருமடந்தை தாங்கியதும் பொய்யாமோ?
27. கூ[illegible] குருபரம னின்னுமந்
28. தேம்பாத மாலையெனச் சேர்த்தியதும் மாறாமோ?

## ஈரடி அராகங்கள், 4.

176367

29. எவரெவ ரிமையவ ரெவரெவர் மறையவர்
30. அவரவர் தொழவரு மருமறை யருளினை
31. அடிநடு முடிவில வருள்பர கதிதரப்
32. படிமிசை புகலெனப் பரமனை நடவினை
33. உடுபதி யடிமிசை யொளிவிட வருணனை
34. மடிமிசை யுடுகனி மனையென வுடையினை
35. அளவில வினைபுரி யலகையி னிலையறக்
36. களவினை யுளவினைக் கரவினைக் கழுவினை

## பெயர்த்தும் ஈரடித் தாழிசைகள், 4.

37. பாடுவார் பாடுவதுன் பரம்பொருளாந் திருப்புகழே
38. சூடுவார் சூடுவதுன் றிணையடியே யாமன்றோ?
39. ஓர்கரத்திற் றிருமகனு மோர்கரத்தின் மலர்க்கோலும்
40. சேர்வரத்தின் றிருவழகைச் செப்பவொரு வசமாமோ?
41. கருணைமடை திறந்தனைய கண்ணுடையா யென்பரது
42. தருணமறிந் தருள்புரியுந் தகையினுக்கோர் சார்பாமோ?
43. வண்டுபடு மலர்புரைய மானவரும் வானவருந்
44. கண்டுபணி யடியையெனிற் காட்சியருட் கிலக்கமோ?

757



நாற்சீர் ஈரடி அம்போதரங்கம், 2.

45. தருமமுந் தானமுந் தவமும் ஞானமும்
46. அருமையும் பெருமையும் அறமும் மேயினை
47. வஞ்சமும் நஞ்சமும் வாழ்வு மில்லதாய்த்
48. தஞ்சமுங் கருணையுந் தாயு மாயினை.

முச்சீர் ஓரடி அம்போதரங்கம், 4.

49. வனநிலை சிகர மடுத்தனை
50. மருமலர் விருது பிடித்தனை
51. கனைகட லுலகை வெறுத்தனை
52. கதிதரு மறையை விரித்தனை

இருசீர் ஓரடி அம்போதரங்கம், 8.

53. மண்ணை வென்றனை
54. பெண்ணை வென்றனை
55. மறந்து றந்தனை
56. அறஞ்சி றந்தனை
57. அன்பு காட்டினை
58. இன்ப நீட்டினை
59. அருமை யாயினை
60. உரிமை மேயினை

1486
8914.874

எனவாங்கு (தனிச்சொல்)

பதினான்கடி நிலமண்டில ஆசிரியச் சுரிதகம்.

61. மலர்தலை ஞாலத்து மக்கட் பரப்பில்
62. உயர்மா தவத்தோர்க் குயர்மா தவத்தோய்
63. வாழி வாழியுன் மைந்தன் வாழி
64. சூழுயர் வரத்தின் துணைவியாள் வாழி
65. ஏழுயர் வரத்துன் னிணையடி வாழி
66. மறையே திரண்டவுன் வடிவம் வாழி
67. அடியேன் வேண்ட லறைகுவ லொன்றே
68. பண்ணாட் புரிந்த பவமெலாந் துடைத்து
69. ஐம்புல நுகர்ச்சி யடங்குங் காலை
70. சேசு மாமரி சூசையென் றோத
71. உன்பெருந் துணைவி யொருமக வோடும்
72. நீவர வேண்டும் நிழல்தர வேண்டும்
73. ஆருயிர் பதைத்துச் சோர்வுறா வண்ணம்
74. அடைக்கல் னிதந் தருண்மதி யெனக்கே.

### நேரிசை வெண்பா.

எனக்கே பெருங்கருணை செய்வா னெழுந்தான்
றனக்கே யடிமை தமியேன்—மனக்கேழ்
திருவரங்கொ ளெண்ணூர் திருவடியான் யார்க்குந்
தருவரங்கொ ளெண்ணூர்த் தலம். (2)

### கட்டளைக் கலித்துறை.

தலமார்ப் பொருடொறு முள்ளும் புறத்துந் தனித்தியங்கும்
புலமார்ப் பொருளுரு வாகிய ஞான்றலர்ப் பூங்கொடிக்கீழ்
வலமாப் புரந்தனன் யாரெனி லென்னுயிர் வாழ்விக்கவே
நலமாக் கிளருமெண் ணூர்வளர் சூசையென் னுமைத்தனே. (3)

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

நாவினிக்கத் தமிழ்பாடிப் புல்லர்களைக் கொண்டாடும்
நாவலோர்காள்!
தேவினிக்கச் சிறப்புறுமோ? நரகல்லால் மதுகரங்கள்
தெவிட்டிப் பாடும்
பூவினிக்கப் பொழிலெண்ணூர் புரந்தளிப்பான் திருவடிக்கே
புகழ்மின் சாலப்
பாவினிக்கச் செவியினிக்கு முளமினிக்கும் சற்கதிவான்
பலித்ததாமால். (4)

### எழுசீராசிரிய விருத்தம்.

படிகோடி யாக வினையான் மெலிந்து
படர்கோடி நின்ற பரிசால்
இடிகோடி யாக விடுமாரி பெய்த
இயலா னழித்த விறையோன்
மிடிகோடி யாக வுருவாகி வந்து
விளையாடு மார்பி னெழிலான்
கடிகோடி யாக முகமாற வெண்ணூர்
கனிவா யுறைந்த னனரோ. (5)

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

உலையிருந்த சிலைத்தழும்பி னுயர்தோள் வேந்தன்
உப்பரிகை யானவளை யொளிர்ந்த வெய்யோன்

கலையிருந்த வுடையானை யெனது தாயைக்
காதலித்த காதலனைக் கருது மெண்ணூர்
நிலையிருந்த மாதவனை யெந்த நாளும்
நினையாத புகழாத நிலைதாழாத
தலையிருந்தென்? மனமிருந்தென்? தனிநா வென்னே?
தரிக்குமுயி ரில்லாத சடலமாமால். (6)

## புயவகுப்பு.

### ஆசிரியவண்ணைச் சந்தவிருத்தம்.

#### முதலடி.

சகலவுயி ரண்ட வகிலவுல குண்ட
பெருவெளி பரந்து பொருடொறு நிறைந்து
தருகதி ரொருகோடி விட்டுப் பொலிந்தன,
சசிகதி ருடுக்கள் மலைமணி தருக்கள்
கடல்நதி யினத்தும் பொருள்பல வினைத்தும்
தவறில முடியா தமைத்துப் பயந்தன,
சரணமென நின்ற வொருமுனியை யன்று
மகாமினி துண்டு மறுகரை யுமிழ்ந்து
தரவொரு நவமாக வைத்துப் புரந்தன,
சமர்சிறிது மின்றிப் பகைவர்நகர் குன்றி
மதிலொடு தகர்ந்து பழமறை கொணர்ந்த
தனதடி யவரோடு கூடிச் சினந்தன.

#### இரண்டாமடி.

பகைமையுறை யைந்து அரசர்பொர வந்த
பொழுதிலொரு வேந்து படுதுயரி னீந்த
பகலவ னெடுநேரம் நிற்கப் புரிந்தன,
பழமறை கொணர்ந்த வழிநதி பிரிந்து
அலையிரு புறத்தும் மதிலென நிறுத்திப்
பகர்வலி யிதுவாகச் சுட்டிச் சிறந்தன,
படர்முகில் படிந்து பரவையின் முகந்த
மழையினி லமிழ்ந்து படிமுழு தழிந்து
பலதுயர் வெகுவாக வைத்துத் தணிந்தன,

பரவுநக ரைந்துங் கனல்பொழிய வெந்த
புழுதிநிலை கண்டு அயலவர் மருண்டு
பரிபவ நனிகாண வுற்றுச் சிவந்தன.

## மூன்றாமடி.

நகவலகை தந்த கனியினை யருந்தி
அரிவையி னமைந்த கொடுவினை புரந்த
நரனென வடிவாகி யன்பிற் றிகழ்ந்தன,

நளிர்வரை விளங்க இருசிலையி லங்கு
பழமறை வரைந்து முனிபெற விளம்பி
நகுமறை திருவாசகத்திற் பொருந்தின,

நடுகடலி னூடு படையரச னோடு
கயரத துரங்க மடிவுற தரங்கம்
நடைபெறு மளவாக விட்டுக்கொதித்தன,

நரபதி குலத்து கனிமகளிடத்து
கரமிசை வளர்ந்து வுரமிசை தவழ்ந்து
நவில்திரு முலைபால் சுவைத்துக் களித்தன.

## நான்காமடி.

ககனமு நடுங்கப் பகலவ னொடுங்க
மாமிசை மரித்து மறுபடி யுயிர்த்துக்
கமழ்தரும் விருதோடு வெற்றிப் புனைந்தன,

கனகமுடி வேந்தர் திருவடி பணிந்து
தமனியமு மீறைப் பரிமளமு மேறக்
கனிவொடு தருதூப வர்க்கங் கமழ்ந்தன,

கனைகுரலின் சிங்க விடுதியி லடைந்த
தவசியுயிர் கொண்டு கதிபெற நவின்ற
கருணையின் பிரதாப மொய்த்துத் தெளிந்தன,

கலவமயி லன்னூர் குலவுவய லெண்ணூர்க்
கடிபமலர் வாகை யுடையவளன் சூசை
கமழ்திரு மகனூர்ந்த கொற்றப் புயங்களே. (7)

நேரிசை வெண்பா.

புயங்கவினை யானுயிர்க்குப் போந்தசன்ம மாசு
இயங்கு திங்களேழி விரித்தான்—நயங்கருதி
வந்தமைந்தா னெண்ணூர் மனுக்காள்! குறைதீர்வீர்
நுந்தமைந்த ரோடும் நுவன்று. (8)

கட்டளைக் கலித்துறை.

நுண்ணிய நூல்பல கற்றுந் தெளிந்தும் நுவன்றுமென்ன?
மண்ணிய லாட்சியுங் கீர்த்தியும் பெரு மதிப்புமென்ன?
தண்ணிய செந்தமிழ்ப் பாமாலை மேவித் தழைக்கு மெண்ணூர்ப்
புண்ணிய னின்னரு ளில்லாதபோது பொருளல்லவே. (9)

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பொருளை விரித்தானும் இருளை யிரித்தானும்
பூவின் சரத்தானுந் தேவினூரத்தானும்
மருளை யுதைத்தானும் அருளை விதைத்தானும்
மன்னர் குலத்தானும் நன்னர் புலத்தானும்
அருளை நிறைத்தானுங் கருணை வரத்தானும்
அடவி நடந்தானும் புடவி கடந்தானும்
பரமபதத்தானுஞ் சிரமவிதத்தானும்
பண்ணூர் தடத்தானும் எண்ணூரிடத்தானே. (10)

கட்டளைக் கலித்துறை.

தானே தனக்கொத்த சாளாய் அடியர் தமதுளப்பூர்
தேனே கருணைக் கடலே எண்ணூர்செய் செழுந்தவத்துக்
கோனே முடவன் மலைத்தேன் விரும்பிய கொள்கையைப்போ
லானே னினதரு ளேக்கியென் னூர்வத்தை யாண்டருளே (11)

## மேகவிடுதூது.

நேரிசை வெண்பா.

ஆண்டுவருங் கொண்டல்காள்! அன்பர்தொழு மெண்ணூரின்
ஆண்டகையைக் கண்டு அடிபணிந்து—தூண்டிவிட்ட
என்காதன் முற்றும் இசைவாத் தெரிவிப்பீர்
தன்காவல் கொண்டுவரத் தான். (12)

## கலி விருத்தம்.

தானையொடு தரணிபனைத் தாழ்கடலி லாழ்த்திவிட்ட
கோனையொரு மகனுக்க் கொண்டனைத்த எண்ணூராய்!
ஞானநெறி வழிகாட்டி நாயகனீ நினதுவடி
யேனையரு ளாட்கொளுநா ளென்னாளோ? செப்புதியால் (13)

## எண்சீ ராசிரியச் சந்தவிருத்தம்.

செய்யு ஞானமும் பெய்யும் வானமும்
சீருஞ் செல்வமும் பேருங் கல்வியும்
மெய்யும் வேதமுந் தெய்வப் போதமும்
விளங்கு பத்தியுந் துலங்கு புத்தியும்
எய்து மாண்மையுந் தூய்ய கேண்மையும்
எங்கு மேன்மையுந் தங்கு நோன்மையும்
கொய்யும் பூந்தடம் ஐயர் மாமடங்
கோவிலெண்ணூரை மேவி னண்ணுமே. (14)

## எழுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

நறைமாலை கொண்ட புலவோர் வணங்க
நளிர்மாலை கொண்ட இறையோன்
மறைமாலை கொண்ட மனையா ளுவப்ப
மணமாலை கொண்ட திறலோன்
துறைமாலை கொண்ட தமிழ்மாலை யாலே
துதிமாலை கொண்ட புகழோன்
பிறைமாலை கொண்ட மதிலாரு மெண்ணூர்
பெருமாலை கொண்ட னனரோ. (15)

## இதுவுமது.

கொடையோ சுரந்தமுகில் விழியோ திறந்தமடை
குலமோ புரந்த வரசு
நடையோ சிறந்தமறை விருதோ மலர்ந்தகொடி
நலமோ பரந்த புணரி
படையோ நிறைந்தசுரர் எனவே புகன்றறைவர்
பதியா லுயர்ந்த எண்ணூர்
உடையோ னிருந்துதவு வருளே மகிழ்ந்தினிது
உலகீ ரருந்த வருவீர் (16)

## தவம்.

கட்டளைக் கலித்துறை.

அருந்தவ மென்னக் கனிகாய் சருகை யருந்திவனத்
திருந்தவஞ் செய்யத் திரிவீ ரரவோ ரியங்குமெண்ணூர்
பொருந்தவந்தானை மனமொழி வாக்கிற் பொருந்துவிரேற்
பெருந்தவமாகு மிதுவே தரும்பின் பெரும்பயனே. (17)

இதுவுமது

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பயன்றருமென் றுன்னிபல தீர்த்தத்தும் மூர்த்தத்தும்
படிந்துஞ் செற்றும்
நயன்றருமென் றுலகுரைத்தும் நனிகூடா வொழுக்கத்தி
னடித்து நிற்பீர்
வயன்றருமெண் ணூர்வதிந்து சடைமுடியோ டுடைநீத்து
வளனுர் தெய்வ
வியன்றருமெல் லடிமுடியாப் புனைந்திருப்பீர் தவப்பேறு
விளங்கத் தானே (18)

சிந்தடி வஞ்சி விருத்தம்.

விண்ணூர் செல்வமு மேன்மையும்
மண்ணூர் கல்வியு மானமும்
எண்ணூர் வந்திடி லெய்தலாம்
புண்ணூர் நெஞ்சேமுப் போதுமே. (19)

கட்டளைக் கலித்துறை.

முப்போதும் வானவர் வாழ்த்திய வாழ்தொலி மொய்த்த வெண்ணூர்
கைப்போது வாகை யுடையாய்! எனக்குக் கருத்தொடுங்கும்
அப்போது சொல்லவும் நாவெழு மோவெனும் அச்சத்தினல்
இப்போதே சொல்லிவைத் தேனருள் என்மே லிருக்கவென்றே. (20)

## நெஞ்சுவிடு தூது.

நேரிசை வெண்பா.

இருந்தேன் வழிநோக்கி எண்ணூரா ரின்னும்
பொருந்தா மரபிற் புலர்ந்தேன்—திருந்தவர்பால்
சென்றதுகொல்? மீண்டதுகொல்? செவ்வி பெறுந்துணையும்
நின்றதுகொல்? தூதுசென்ற நெஞ்சு. (21)

இதுவுமது

கட்டளைக் கலித்துறை

நெஞ்சே தெரிந்தவர் எண்ணூர் நராதிபர் சேர்ந்தவர்பால்
பஞ்சே படுந்துயர் யான்பட்டேனென்று பகர்ந்திடிலோ
அஞ்சேலெனவப யங்கொடுத் தாள்வ ரதுவுமன்றி
மஞ்சே யனையவர் கேட்டால் தருவர்தம் மாலையுமே. (22)

இரங்கல் மடக்குத் தாழிசை.

மாலை தந்திட வந்தவர்மணி
மாலை தந்திலர் வாசமாம்
வனசங் கண்டதாள் கொண்டவர்முக
வனசங் கண்டிலர் கூர்மையார்
வேலை கொண்டவர் என்னுளப்பணி
வேலை கொண்டிலர் மேன்மையாம்
வேதந் தேர்ந்தவர் என்மனப்பரி
வேதந் தேர்ந்திலர் நாண்மலர்க்
கோலை யேந்தினர் ஆட்சியானசெங்
கோலை யேந்திலர் தேவதாய்
கோதை வேய்ந்தவர் என்மொழித்தமிழ்க்
கோதை வேய்ந்திலர் தீயுமிழ்
பாலை யுண்டங்குச் சென்றவர்மொழிப்
பாலை யுண்டிலர் ஆதலால்
பண்ணை வேண்டிய எண்ணூர்வந்தவர்
பண்ணு நீதி யநீதியே. (23)

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

நீதிமுறை வழுவின்றி யுலகை யாண்ட
நிருபர் பிரான் தாவீதன் மரபுதோன்ற
ஆதிமுறைப் பழமறையின் மொழிகள்வீற
அவதரித்த திருமறையின் வடிவினனே
பாதிமதி மிதிகன்னி யனையாளோடும்
பரமனென வருஞான புதல்வனோடும்
ஓதிமென தாவியுடல் பிரியுங் கால்வந்
துய்விப்ப துனதுரிமைக் கடமைதானே. (24)

### கட்டளைக் கலித்துறை.

தாயிருந்தாலுந் தமரிருந்தாலுந் தவழ்மதலைச்
சேயிருந்தாலுந் திருவிருந்தாலுந் திருவிருந்த
மாயிரும் பொன்மதி லாருமெண்ணூர்வரு மாதவனே!
நீயிருந் தாலன்றோ ஞானமும் வீடும் நிலைபெறுமே. (25)

### மடக்கு—அறுசீராசிரிய விருத்தம்.

நிலையநம்பும் பதத்தழகன் நீரரும்பும் பதத்தழகன்
நிறைவான் வீட்டின்
கலையரும்பு முகத்தழகன் கதிரரும்பு முகத்தழகன்
ககன மேவும்
மலையரும்பு முரத்தழகன் மகனரும்பு முரத்தழகன்
மலிந்த தெய்வத்
தலையரும்பும் வரத்தழகன் தயையரும்ப எண்ணூரிற்
றரித்திட்டானே. (26)

### மடக்கு—கட்டளை மண்டலக் கலிப்பா.

தரித்த தும்பணி வானவர் வேலையே
தவிர்த்த தும்பொரு மானவர் வேலையே
விரித்த தும்பழ மாமறை வேதமே
விசித்தொ ழித்ததும் பேயயர் வேதமே
பரித்த துந்திரு மாதவக் கோலமே
பரிந்த தும்மது மாமலர்க் கோலமே
அரித்த யங்குமெண் ணூரவர் தானமே
ஆய்ந்து தேர்வளன் செய்யருட் டானமே. (27)

### எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

தாயனைக் கடவுட் சேயனைப் புரந்த
தந்தையை யெந்தையைத் தணியா
நேயனைக் கமல வாயனை எண்ணூர்
நிமலனை யமலனை யடைந்தேன்
பேயினைத் துரத்தி நோயினைத் துடைத்துப்
பெரும்பதத் தரும்பதந் தருவான்
நாயனை யடிமை மேயினை யென்று
நயந்தவர்க் குயர்ந்தரு ளுறுமே. (28)

## வண்டு விடுதூது.

### நேரிசை வெண்பா.

உம்பர்தொழு மெண்ணூரார்க் குண்டே பலநினைவு
இம்பரடி யேன்மே லிருக்குமோ?—அம்புயங்கொள்
தேனேயுன் னைம்போற் செப்பத் தெளிந்தநீ
தானே வரச்சொல் தனித்து. (29)

### அம்மானை

### மடக்கு—தாழிசை.

தனியான வெண்ணூர்த் தலத்திறைவர் எப்பொழுதும்
தணிவான மாதவத்தைத் தாங்கினர்காண் அம்மானை
தணிவான மாதவத்தைத் தாங்கினரே யாமாகில்
கலியாணஞ் செய்வரோ? காரிகையை அம்மானை
கலியாணஞ் செய்ததுமோர் கற்பனையால் அம்மானை. (30)

### நேரிசை வெண்பா.

கற்பலகைக் கண்வரைந்த கற்பனைகள் கண்டடையச்
சொற்பலகைக் கொண்டு தொழுவோர்க்கும்-பற்பலகை
வல்லினமு மெல்லினமும் வந்துபடா தெண்ணூரார்
அல்லினத்திற் சொல்லியதென்? னூர்வு. (31)

### சித்து

### கட்டளை மண்டலக் கலிப்பா.

ஆர்வங் காட்டிய தேவரன் வாழுமூர்
அன்னங் கண்படு பண்ணையெண் ணூரதிற்
சேர்வம் பித்தளை மாதங்க மாக்குவம்
சிறக்குங் கஞ்சத்தைப் பொன்னகை மாற்றுவம்
தேர்வம் ஈயத்தை வெள்ளிய தாகவே
செய்வம் வெள்ளியும் பொன்னென வொப்பவே
பூர்வ மில்லாப் புதுமைபி லெங்களைப்
போலொரு சித்தர் பூவி லரிதரோ. (32)

## சம்பிரதம்.

### பதினான்கு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அண்டபகி ரண்டமொடு மண்டலமும் விண்டலமும்
அலைகடலுந் திசைக ளெட்டும்
அரைநொடியில் வலம்வருவம் குலகிரிகள் முழுவதும்
அசைத்துப் பிடுங்கி யெறிவம்
தெண்டிரையில் நடைபயில்வம் மண்டழவி னிலைபெறுவம்
சித்துமுழு தொத்து வருவம்
தேனடி வண்டுபடு சிறகரை புலர்த்து பொழிற்
செங்க முகின் பாளை விரியக்
கண்டுவிட நாகமெனக் கொண்டுமயில் சினை தாவுங்
கழனிபுடை சூழு மெண்ணூர்க்
காவலனைக் காவலற் குரிமையாந் திருமகனைக்
கன்னிமனை யாளை வாழ்த்தித்
தொண்டுபுரி யாதபெரு மண்டையரை யெங்கணுந்
துரத்திப் பிடித்து வந்து
தூயவரு ளொழுகுதிரு வடியிணையை யெந்நாளுந்
தொழுவிப்ப தெமது தொழிலே. (33)

## வினாவுத்தரம்.

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

தொல்லறத்தின் ஞானியர்கள் அறமிரண்டாத்
துறவென்றும் மனையென்றுந் தொகுத்திருக்கப்
பல்லறத்தின் புகழ்படைத்த எண்ணூர் வாழும்
பாவலரே! யாதாநீர் பகட்டுகின்றீர்
இல்லறத்தில் மனையிருக்க மகனிருக்க
ஈரறமு மோரறமா விழைத்த தென்ன
நல்லறத்திற் புகல்வதுமக் கடைவோ? அந்த
நடுநீதி நாடறிய நாட்டுவீரே. (34)

இதுவுமது

நாட்டுவதென்? பலநீதி நங்காய்! கேளாய்
நமதையர் எண்ணூரார் துறவறத்தைக்
கூட்டுதற்காத் தவவனத்துக் குன்றிவர்ந்த
குறிப்பறிந்தோர் பெருவாறேன் குறுக்கிட் டாங்கே

நாட்டினிலே யிவ்வொழுக்கங் கொண்டு சேர்க்கின்
நல்லறத்தோ டில்லறமும் நடக்குமென்ன
ஈட்டருமா தவங்கொண்டார் மனையிலீது
ஈரறமு மொன்றான வியல்பதன்றே. (35)

## கட்டளைக் கலித்துறை.

தனத்துக் கழகு தருங்கொடை நீழல் தருக்கழகே
புனத்துக்கழகு விளைபயிர் ஞானம் பொறிக்கழகே
கனத்துக் கழகு பெருமழை யென்பர் கருதுமென்றன்
மனத்துக் கழகுநீ யன்றோவெண் ணூர்வரு மாணிக்கமே. (36)

## காலம்.

## எண்சீராசிரிய விருத்தம்.

மாத்திசைக ளேறிட்டுப் பார்க்குங் காலம்
மனமெலிய விடழிந்து வாடுங் காலம்
நாத்தழும்பத் தழுதழுத்துப் பேசாக் காலம்
நயமென்றுஞ் சிந்தித்து நடவாக் காலம்
பூத்தொடுத்துத் திருவடியிற் புனையாக் காலம்
பூண்பலவுந் திருத்தமுற வணியாக் காலம்
பாத்தொடுத்த தமிழ்மாலை மணக்கு மெண்ணூர்ப்
பதியுடையார் எதிர்வாராக் காலந்தானே. (37)

## குறம்.

## ஆறுசீ ராசிரிய விருத்தம்.

காலமெலாங் குறிதெரிவேன் மடந்தையரே! மருந்தறிவேன்
கருத்துந் தேர்வேன்
சாலமெலாந் தெரிந்தாரைப் புறங்காண்பேன் கூடைமுறந்
தனித்துச் செய்வேன்
கூலமெலாம் பொன் கொழிக்கு நதிபுடைசூழ் எண்ணூர்வாழ்
குறத்தி நானே
தாலமெலாங் குறம்பாடி வருமென்னைக் கேட்டதெல்லாஞ்
சாற்றுவேனே. (38)

## வற்புறை.

கட்டளைக் கலித்துறை.

சாற்றுமி னெண்ணூர்த் தலத்துறை யாண்டகை தன்புகழைப்
போற்றுமின் பூமலர் பொன்னடி நாளும் புனைந்துளத்திற்
றேற்றுமின் கல்வியும் ஞானமும் வீடுந் தெளிந்தடைவீர்
ஆற்றுமின் நன்னெறி யீதே யெவர்க்கும் அறைந்தனனே. (39)

## உயிர்வருக்க மோனை.

நிலமண்டில ஆசிரியப்பா.

அறமெலாந் திரண்ட அருளொரு வடிவன்
ஆருயிர்க் கிரங்குந் தாயினு மினியான்
இல்லறந் துறவற மெனப்புகல் கின்ற
ஈரறந் தம்மையும் ஓரறங் கண்டோன்
உலகெலாம் புரக்கும் ஒருவனுக் கமுதம்
ஊட்டியே புரந்த மாட்சியிற் சிறந்தோன்
எம்பெரு மாட்டியைத் தன்பெரு மாட்டியா
ஏந்துபூங் கொடியொடு வேய்ந்த பூங்கொடியான்
ஐயந் தோற்றியோர் ஐயனிற் றெளிந்தோன்
ஒன்பது கணமுங் கும்பிடுங் கழலான்
ஓதுமென் குறையெலாந் தீதற முடிப்பான்
ஔவிய மொழிய அவன்புக ழோமினே. (40)

## கைக்கிளை.

வியனிலை-மருட்பா.

மின்கொழிக்கு மெண்ணூர் விளங்குந் திருமலைமேல்
பொன்கொழிக்குஞ் சோலை புகுந்தார்க்கு—மன்கொழிக்கும்
பாரோ? வரையோ? பனியால் படர்ந்த
நீரோ? விடமா நிலையே
யாரோ வறிவார் தெளிவா னினியே. (41)

## இரங்கல்.

கலிநிலை வண்ணத்துறை.

இருபுடை யமரர்கள் பரவியது திறைஇறை யெண்ணூரார்
வருதிரு மகனொடு கரமிசை வளரமறந் தாரோ?
மருமலர்க் கொடியினி லொருமல ரருளியு வந்தாரேல்
திருவடி மலரிலென் னுளமல ருறவென்ச் சேராதோ? (42)

### நேரிசை வெண்பா.

சோரார்ப் புறங்கண்ட செங்கோல் தவிதாசன்
போரார் குலத்திற் பிறந்துமதி—யோரேழிற்
சென்ம வினை துடைத்தான் சேர்ந்தாரை யெண்ணூரிற்
கன்ம வினை துடைத்தான் காத்து (43)

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

காத்தானை யுலகமுத லுயிர்கள் யாவுங்
கண்டானைக் கொண்டாடித் திண்புயத்தே
சேர்த்தானை யெனையடிமை கொண்டாள் வானத்
தெய்வகன்னி நாயகனைச் சிந்தை நோயைத்
தீர்த்தானைத் திருமறையைப் போதித்தானைத்
தேசமெங்கும் மணம்பரப்பி வாடாச் செங்கோல்
பூத்தானைப் பெரியவர்வாழ் எண்ணூரானைப்
போற்றாதே நாள்பலவும் போக்கினேனே. (44)

### ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த வஞ்சித்தாழிசை.

பதியானை மெஞ்ஞான
மதியானை யெண்ணூரின்
நிதியானை நினைவார்செய்
துதியானைப் பணிவீரே.
பெரியானை யெண்ணூரென்
புரியானைக் கொடிநீழல்
உரியானை யெங்கெங்கும்
அரியானைப் பணிவீரே.
முன்னவனை யெண்ணூரின்
மன்னவனை மாதாவை
அன்னவனை யார்யார்க்கும்
பொன்னவனைப் பணிவீரே (45)

### வஞ்சித்துறை.

பண்ணூர் வாயனை
எண்ணூர் நாதனை
நண்ணீர் நாளையே
விண்ணீ ரென்பரே (46)

## ஊசல்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

எழுத்தசைசீர் பந்தமெனுந் தம்பம் நாட்டி
இசைந்தஅடி தொடைவிகற்ப விட்டங் கூட்டி
வழுத்தருவெண் பாவாலாம் பலகை சேர்த்து
வஞ்சிகலித் துறைவிருத்தக் குஞ்சந் தூக்கிப்
பழுத்ததமிழ்க் கலம்பகமாம் ஊசல் மீது
பனுவல்வடி வாய்வந்தோய் ஆடீரூசல். (47)

## இதுவுமது.

ஆனவர்க ளிருமருங்கும் வடந்தொட் டாட்ட
அமரர்மலர் வாய்புதைத்துன் னேவல் கேட்ப
மானவர்க ளடிபணிந்துன் வரங்கள் வேண்ட
மறையவரும் மன்னவரும் வாழ்த்து கூறத்
தேனமரும் பூங்கொடியி னிழலிருந்து
தெய்வகன்னி மகனுடனே ஆடீரூசல்
கானமரும் பொழில்வயல்சூழ் எண்ணூர் மேவுங்
காவலனே! தேவியுடன் ஆடீரூசல். (48)

## கார்.

கட்டளைக் கலித்துறை.

ஆடிய வேனிலுந் தண்பனிக் காலமு மாங்கொழியத்
தேடிய கார்வந்து மின்னும் வாரதென் சிந்தனையோ?
நீடிய வாகை யுடையவெண் ணூரார் நினைவுதப்பி
வாடிய வென்னை மறந்தனரோ? என்ன வாய்மையிதே! (49)

## மறம்.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வாய்மைநெறி யறியாத தூத! வோலை
வல்லிரும்பிற் செல்லரித்த வடிவு காட்டித்
தூய்மைநெறி யெண்ணூரார் திருமலர்த்தாள்
தொழுமறவர் குலக்கொடியைத் துணிந்து கேட்டாய்
ஆய்மயிலை முன்வேட்ட அரசரெல்லாம்
ஆங்காங்கு படும்பாட்டை யறியாய் போலும்
செய்மைநெறி போய்முடியுங் குடைவில் வேல்வாள்
செங்கோலும் பெருங்கொடியுஞ் சிதறக் காண்பாய். (50)

இதுவுமது.

காணரிய திருமுகத்தைக் காட்டுந் தூதா!
　காவலருங் காலாளுந் தொண்ட ரானர்
சோணரிய புரவியெங்க ளூர்தியாச்சு
　தோலினத்தின் கொம்பரெலா மஞ்சமாச்சு
நாணிபெறு சிலைவாள்வேல் வேலியாச்சு
　நளிர்கவிகை தேருருளை படலதாச்சு
பேணியினி எண்ணூரா ரடிபணிந்து
　பேசாமற் றிரும்புகநின் பதிசேர்வாயே. (51)

## மயில் பயிற்றல்.

### எழுசீர்க் கழி நெடிலாசிரிய விருத்தம்.

பருந்தினஞ் சுழலும் நிணங்கமழ் வைவேல்
　பார்த்திபர் குலத்தனெண்ணூரன்
அருந்தமிழ்க் கிரங்கும் அருந்தவன் மேனாள்
　அமலனை வளர்த்தமை பொருட்டுத்
திருந்திய மோலி பரமனே கவிக்கச்
　சிறந்தன னுதனத் தென்னில்
அரும்பெறல் மயில்காள்! தோகையைப் பரப்பி
　ஆடுமின் அவன்வர வென்றே. (52)

இதுவுமது.

வரமெலாந் தொகையாப் படைத்த காரணத்தால்
　வளனெனும் பெயர்கொளெண்ணூரன்
வரமொருவேழுந் தன்விருப்பாக
　வழங்கிடத் தனிவரம் பெற்றோன்
வரமெலா மடியார்க் கருள்செய விரங்கி
　வந்தனன் இந்நக ரென்னில்
அரவழி மயில்காள்! தோகையைப் பரப்பி
　ஆடுமின் கோனவன் வரவே. (53)

## மேகவிடு தூது.

### கட்டளைக் கலித்துறை.

கோமாலை கொண்ட புயல்கா ளெனதிடர் கூறியெண்ணூர்த்
தேமாலை கொண்ட மணவாள ரம்புயச் சேவடிமேல்
பாமாலை கொண்டதைப் பூமாலை யாக்கிப் பதிவித்தன்னூர்
மாமாலை கொண்டணை வீரந்திமாலை வருமுன்னமே. (54)

## மதங்கு.

### தாழிசை.

முன்னடந்த வன்னநாணி முகமுடைந்த மென்னடை
மொய்த்தலம்பு பொற்சிலம்பு முந்துதாண் மதங்கிகேள்!
பொன்னின் மாட மின்னலாடப் பொன்னிலத்து வானவர்
பூசைசெய்து வீசுதூபப் புகைமணக்குங் கோயில்சீர்
மன்னுமெண்ணூர் தன்னில்நீடு மாடவீதி யெங்கணும்
மகரயாழி னிசைநரம்பேழ் மாடகத் திருத்திமேல்
பன்னுவாகை முன்னவன்சீர் பாடியாடிப் போற்றியே
பரிசுபெற்ற வரிசைமுற்றும் பாங்கர்சூழ வாழ்வையே. (55)

## திருநாமப் புகழ்ச்சி.

### இருபத்தெண் சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சூசையெனு மீரெழுத்தே மெய்ஞ்ஞானத் தெய்வவாத்
தொகுதி யாகும்
சூசையெனு மீரெழுத்தே திருக்குடும்பத் தலைமைபெறு
சுடரே யாகும்
சூசையெனு மீரெழுத்தே சுருதிமறை வடிவான
தோற்ற மாகும்
சூசையெனு மீரெழுத்தே வளனென்னச் செந்தமிழிற்
றுலக்க மாகும்
சூசையெனிற் கல்விவருஞ் செல்வம்வரும் மெய்யறிவின்
சூழ்ச்சி யுண்டாம்
சூசையெனிற் பத்திவரும் முத்திவருஞ் சித்திவருந்
தூயராவார்
சூசையெனிற் பேயகலும் நோயகலுந் தீவினையின்
தொடர்பு நீங்கும்
சூசையெனின் மகவில்லார் மகப்பெறுவர் எஞ்ஞான்றுஞ்
சுகத்தைக் கொள்வார்
சூசைதிருக் காத்தழகைத் தெய்வமணங் கமழ்மலர்ப்பூந்
துவசங் காட்டும்
சூசைதிரு வாத்தழகை மெஞ்ஞான மறைவிளக்கித்
துலங்கக் காட்டும்
சூசைதிரு வுரத்தழகைச் சுடர்பாப்பிக் கருணைசெய்யுஞ்
சுதனே, காட்டும்

சூசைதிருப் பதத்தழகை வானவர்க ளணியணியாச்
 சூழ்தல் காட்டும்
சூசையெனுந் திருநாமம் சுரர்தேம்பா வணியென்னச்
 சொன்னதாகும்
சூசையெனுந் திருநாமம் பரமனுயர் மார்பிலணி
 தொடையலாகும்
சூசையெனுந் திருநாமம் அளவில்லாத் தெய்வவருள்
 சுரக்கச் செய்யும்
சூசையெனுந் திருநாமம் பெற்றவர்கள் பெற்றபயன்
 சொலமதிப்போ. (56)

நேரிசை வெண்பா.

மதுவுண்ட வண்டினங்காள்! மாமணத்திற் பூத்த
மதுவுண்ட வண்டினத்தை மானுங்—கதியுண்டோ?
வாடா மதுவுரு வாசம் பரந்தெண்ணூர்க்
கூடார்க் கடிந்தவன்கைக் கோல். (57)

## கிள்ளை பயிற்றல்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

வயலெலாஞ் செந்நெல் வரப்பெலா முத்தம்
 வழியிரு மருங்கெலாம் பவளம்
அயலெலாம் பணிலம் அகழெலாம் ஆம்பல்
 அம்புயத் தொகையெலாம் அன்னம்
கயலெலாம் நீர்பாய் மடையுடை யெண்ணூர்க்
 காவலன் காப்பவ னென்று
பயனெலாஞ் சுவைக்கும் பசுந்தமிழ்க் கிளிகாள்!
 பாடுமின் அவன்புகழ் தலத்தே. (58)

தலமெனுந் தாயைப் பணிதல்போற் செந்நெல்
 தலையினால் வணங்கு மெண்ணூரன்
அலகிலாக் கதிர்சால் அருக்கன் அம்புலிமீன்
 அணியெனத் திருவுடல் புனைந்து
உலகெலாம் படைத்த ஒருவனை யளித்த
 ஒருத்தியைப் புரந்தன னென்று
பலகலைக் கேள்விப் பசுந்தமிழ்க் கிளிகாள்!
 பாடுமின் அவன்புக ழெடுத்தே. (59)

## வியப்பு.

### நேரிசை வெண்பா.

எவ்வுயிரு மீன்றவனை என்மகனென் றேந்தி யெண்ணூர்
கவ்விநின்று மேனோர்முனிவன் கண்டுகொண்டேன்—செவ்விபெறுந்
தன்மனையா ளோகன்னி தானோ பெருந்தவசி
என்ன புதுமை? இது. (60)

## தழை.

### கட்டளைக் கலித்துறை.

இருந்தழை யாநின்ற பூம்பொழி லெண்ணூர் இறையவர்வேல்
பருந்தழை யாநின்ற மன்னர்குலத்தர் பணிவரைநாட்
டருந்தழை யாமிது கொண்டார்க்கு வாசமும் அற்புதமும்
தருந்தழை யாநின்ற நல்லார்க்கு வேறு தழையில்லையே. (61)

## குயில் பயிற்றல்.

### எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

இறையெலாம் வணங்கி யிடுதிறை தொகுத்த
இருநிதி நவமணிக் கோடி
தறையெலாம் பரந்து கம்பளம் விரித்த
தகைமைசெய் கோயிலெண்ணூரன்
குறையெலாஞ் சொல்லின் வேண்டிய வரங்கள்
கொடுப்பனென் றவன்புகழ் பாடிக்
குறைவிலாச் சோலை பயிலிளங் குயில்காள்!
கூவுமின் பாவிசைப் படியே. (64)

### இதுவுமது

பாடவு மறியேன் பணியவு மறியேன்
பதமலர் தொழுமடி யவரைக்
கூடவு மறியேன் நகர்வலம் வந்து
கோயில்செய் சேவையு மறியேன்
நாடவு மறியேன் இவையெலாஞ் சொல்லி
நம்பனெண் ணூரில்வா ழரசைக்
கோடலர் தோறுங் குலவுமாங் குயில்காள்!
கூவுமின் அவன்வா வென்றே. (65)

### நேரிசை வெண்பா.

என்கருத்தி லொன்றுமிலேன் எண்ணூ ரிருப்பவனே!
உன்கருத்துப் போல வுதவுவாய்—இன்சுரத்துச்
சேயறியுங் கொல்லோ சிறப்பத் தனையீன்ற
தாயறியும் நல்லநயை. (66)

### கலிவிருத்தம்.

தண்ணிய தருவளர் தனிப்பு ருவுயிர்
எண்ணிய வனசர னிறக்கப் பாம்பினுற்
பண்ணிய வற்புதப் பரமனெண் ணூரனை
உண்ணினை வார்க்கினி யுறுதி சேருமே. (67)

## வலைச்சியார்.

### மடக்கு—தாழிசை.

சேலைகொண்டு விற்க வந்த சேலைகொண்ட மாதரீர்!
செங்கலங்கல் செங்கயற்குச் சேலினங்கள் தோற்றவால்
மாலைகொண்ட எங்களெண்ணூர் மாலைகொண்ட வள்ளலார்
வந்திறைஞ்சு மைந்தருக்கு வந்ததுன்ப மாறவே
பாலைகொண்ட வஞ்சர் நெஞ்சம் பாலைகொண் டிடாமலே
பத்திநேச முத்திவாசப் பான்மை யெல்லாம் வீறவே
நூலைகொண்ட சத்யவேத நூலைகொண்டு தேற்றுவார்
நொய்தி னெய்தி யுய்யவேண்டி நுண்ணிதாக அண்மினே. (68)

### கட்டளைக் கலித்துறை.

அடுக்குஞ் சுவையொளி யூறோசை நாற்றமென் றைம்பகைவர்
கெடுக்குஞ் சமயத் தவனன்றி யில்லையக் கேட்டையெலாந்
தடுக்கும் பதந்தரு வானுய ரெண்ணூர்த் தலத்திறையோன்
கொடுக்குந் தனதரு ளேயரு ளாமென்று கொண்டுய்ம்மினே. (69)

## களி.

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

உம்பரார் தொழுங்கோயி லெண்ணூர் மேவி
ஓதுகின்ற களியரே யுரைக்கக் கேண்மின்
இம்பரா ருண்பதுவுங் களியே யாகும்
ஈக்களெல்லா மொய்ப்பதுவும் மதுவேயாகும்
கொம்பரார்ந் தொழுகுவதுந் தேனே யாகும்
குடிப்பவருங் குவலயத்து மக்களாவார்
வம்பறுப் பூங்கொடிகொள் வளனூர் செந்தாள்
வணங்காரை வணங்குவிப்போம் மட்டிலாதே. (70)

## நாரை விடுதூது

### கட்டளைக் கலித்துறை.

மட்டுப்படாத்திசை யெங்கெங்குஞ் சுற்றி வருங்குருகே!
கட்டுப்படாவரு ளெண்ணூர்த் தலைவரைக் கண்டதுண்டேல்
முட்டுப்படாத வென்காதலைச் சற்று மொழிந்திடுமின்
தட்டுப்படாததோர் புண்ணிய முண்டிந்த தாரணிக்கே. (71)

### வெளி விருத்தம்.

தாய்போ லுயிர்கள் தழைக்கப் புரிவான்—நமரங்காள்
சேய்போல் தெய்வச் சிறுவற் புரந்தான்—நமரங்காள்
பேய்போற் புறவைப் பிடித்தாற் சினந்தான்—நமரங்காள்
நாய்போ லெண்ணூர் நயக்கத் தெளிமின்—நமரங்காள். (72)

### முதலடி ஆறுசீரும் ஏனையடி நான்குசீருமாக வந்த வெண்டுறை.

நயமிருக்குந் தமிழ்மாலை நலமிருக்கும் புகழ்மாலை
நண்ணு மெண்ணூர்
வயமிருக்குந் திருவளனூர்க் காட்செய்யா ரென்செய்வார்?
பயமிருக்கு மரணமது பதிவாக வருமந்நாளே. (73)

## வருகை.

### எழுசீராசிரிய விருத்தம்.

பதியாவும் போற்ற நிலைபெற்ற வெண்ணூர்ப்
பதிமேவுஞ் சூசை முனியே!
விதியாவு மோதி யெமையாள வந்து
வினைதீர்க்கு முனது புகழைத்
துதியாத வாயன் குவியாத கையன்
தொழுகாத மெய்ய னெனினும்
மதியாதுன் சேயும் மனையாளும் நீயும்
வரவேண்டு மென்ற னகமே. (74)

### இதுவுமது

அரணெற்றி வான முகடுற்ற மாட
வணிகொண்ட வெண்ணூ ரரசே!
சரணங்கள் கோடி தருமுன்றன் மைந்தன்
றனையா தரித்து ளுறையுங்
கரணங்க ளோய்ந்து புலனைந்துந் தீர்ந்து
கடை வாயில் பாலதொழுகும்
மரணத்துன் சேயும் மனையாளும் நீயும்
வரவேண்டு மென்ற னகமே. (75)

## அன்னவிடு தூது.

எழுசீராசிரிய விருத்தம்.

வரமெலாந் திரண்ட வடிவுடை யழகன்
வந்னெனுந் தமிழ்ப் பெயருடையான்
கரதலத் தொருபூங் கொடியின னெண்ணூர்க்
காவலன் கோயில்வந் தமர்ந்தான்
உரஞ்செய்அத் தலைவன் அறிகுறி யெல்லாம்
ஓதினேன் உன்மனந் தெளிய
அருஞ்சிறை அனமே! தூதெனப் போய்நீ
அழைத்தவன் றனை வருவாயே. (76)

இதுவுமது.

அலையெலாங் கொழித்த முத்தெலா மகளிர்
அரித்தரித் தெடுத்து செய் குன்றம்
விலையெலாங் கடந்த அவன்பெயர்ப் புகழ்போல்
வெள்ளொளி பரப்பு மெண்ணூரன்
கலையெலாங் கடந்த அறிவின னடியார்
கருதுமுன் கருணைசெய் வள்ளல்
அலகுறும் அனமே! தூதெனப் போய்நீ
அவன்றனைக் கொடு வருவாயே. (77)

இதுவுமது

நேரிசை வெண்பா.

கொஞ்சிகொஞ்சிப் பேசுங் குழந்தை கரத்திருப்பான்
அஞ்சொன் மனையா ளருகிருப்பாள்—கஞ்சமலர்
அன்னமே! தூதா அமயந் தெரிந்தெண்ணூர்
மன்னவனைக் கண்டு வழுத்து. (78)

கட்டளைக் கலித்துறை.

வருவார்க்கு நன்மை யருள்செய்யு மெண்ணூர் வரோதயனே!
உருவாக்கி யென்னைக் கலைஞான மற்றும் உணர்வித்தனை
மருவாக்கு கூந்தல் மட்வார் மயக்கில் மனந்தெளியத்
தருவாக்கி வந்து தருவாயுன்பாத தரிசனமே. (79)

176367
600 009

## மதியோடு உசாவல்.

பத்தடியான்வந்த—பஃறொடை வெண்பா.

தவளமால் சங்கந் தனித்தனியே யூர்ந்து
பவளமால் பூங்கொடியின் பந்தரின் கீழ்ப்போய்
முத்தீனுஞ் செந்நெல் முளைவிதைத்த பண்ணைவாய்க்
கொத்தீனும் பாக்குக் குலைசாய்த் தெழில்வாளை
வெள்ளத்தி னூடே விளையாடு மெண்ணூர்வாய்
உள்ளத்தினாலும் உரையாலும் போற்றொண்ணா
வள்ளலார்மீது மயலாகி மாமதியே!
உள்ளவனப்பும் ஒடுங்கக் கலைதேய்ந்து
நின்றாயோ? என்போல நீளிரவு தூங்காமல்
அன்றாடம் விண்மேல் அலைந்து. (80)

## கடலோடு உசாவல்.

எண்சீராசிரிய விருத்தம்.

அலையெறிந்து வளையெறிந்து முத்தஞ் சிந்தி
அழுதாற்றிப் பகலிரவா யுறக்க மின்றி
நிலையெறிந்து கரைகடந்து அங்கு மிங்கும்
நில்லாத கருங்கடலே நீயுமென் போல்
கலையிருந்த வேதியர்க ளடிபணிந்து
கரங்கூப்பும் எண்ணூரின் தலைவர்மீது
உலையிருந்த மெழுகாகிக் காதல்கொண்டு
உருகினையோ? உண்மையையிங் குரைசெய்வாயே. (81)

கட்டளைக் கலித்துறை.

உரைமீது வந்து புகழ்கின்ற எண்ணூர் உயர்தவனே!
திரைமீது வந்துன் மகன்றந்த காட்சித் திறமென்னவும்
வரைமீது வந்துன் மனைதந்த காட்சி வரமென்னவுந்
தரைமீது வந்து தருவாயுன்பாத தரிசனமே. (82)

மண்டலக் கட்டளைக்கலிப்பா.

தந்தை தாயருந் தானமும் ஞானமும்
தங்கும் வேதமும் போதமும் மானமும்
முந்தை யோருரை நேசமும் பாசமும்
முத்தி சேர்தரு பத்தியும் புத்தியும்

எந்த நாளினும் நின்னரு ளெய்திடின்
எய்த லாமென நின்னடி நோக்கியே
வந்த மைந்தரெண் ணூர்வரக் கண்டுமே
வந்திரங்கில யென்னவுன் னன்பரோ. (83)

எண்சீராசிரிய விருத்தம்.

அன்பர்தொழ வருமெண்ணூராரசே! முன்னம்
ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபாதி
இன்புற்ற வாதிபிதாப் பிதாக்க ளெல்லாம்
இச்சித்துந் தங்கண்ணாற் கண்டிலாத
தென்புற்ற தேவசுதன் பிறந்த ஞான்றே
தெரிசித்தாய் நின்கரத்தி லேந்தப் பெற்ருய்
அன்புடனே வாய்முத்தங் கொண்டணைத்தாய்
ஆதரித்தா யிப்பேறு யார்பெற்ருரே. (84)

## இரங்கல்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பெற்றதெலாம் அடியார்க்குத் தாவிருக்கு மெண்ணூரின் பெரியீர்! கேளீர்
கற்றதெலா மகற்குரைத்தீர் கன்னியெனு, மனையாட்குங் காவல் செய்தீர்
பற்றறவே பேய்ச்சிலைகள் தகர்ந்துவிழத் திருவிழியின் பார்வை தந்தீர்
உற்றவெனக் கென்தந்தீர் உமதடியே நச்சிநின்ற உண்மையாலே. (85)

## இரங்கல்.

கட்டளைக் கலித்துறை.

நச்சுத் தொழிலரை யாட்கொளு மெண்ணூர் நாதிபரே!
அச்சுத் தொழில்செய் மகனையும் நல்ல அடியவர்க்காப்
பிச்சுத் தொழில்செய் கனியையும் விட்டுப் பிரியாமலே
தச்சுத் தொழில்புரிந் தில்லறங் காத்ததென்? சாதனமே. (86)

நேரிசை வெண்பா.

சாமி பிறப்பதெங்கே தாய்மரிக்குக் காப்பெங்கே
பூமிபுரப்ப தெங்கே பொன்னெங்கே—நேமிவளர்
காட்டிற் றவத்தைக் கருதிசென்ற எண்ணூரார்
நாட்டில் வாராவிடிலோ நன்கு. (87)

## ஊர்.

### எழுசீராசிரிய விருத்தம்.

நயமான எண்ணூர் பணிவாக நின்று
நனிநாக ரேத்து புகழோன்
வயனுக வேரி மதுமாலை சூசை
வளமான ஊரை வினவில்,
பயனான தொண்டை வளநாடனைத்தும்
பரிவாக தொண்டு புரியும்
வியனாக நீண்ட தெருவூடு சோலை
விரிகின்ற எண்ணூ ரதுவே. (88)

### நேரிசை வெண்பா.

அச்சுத் தொழில்புரியும் ஆண்டகையி னுருடனே
தச்சுத் தொழில் புரிந்த தன்மையோ?—இச்சித்
தழுதாலும் ஏனென்னுப் ஐயா வென்றெண்ணூர்
தொழுதாலும் ஏனென்னுய் சூழ்ந்து. (89)

### மடக்கு-கட்டளைக்கலிப்பா.

சூழ்ந்த தும்மலர் மேவும் பராகமே
சொந்த மானது மேவும் பராகமே
வீழ்ந்த தும்பல வீனமா தங்கமே
வெறுத்த தும்பல வீனமா தங்கமே
ஆழ்ந்த தும்புன லாம்புரிக்கஞ்சமே
அடுத்த தும்பல போர்புரிக் கஞ்சமே
வாழ்ந்த துந்திரு எண்ணூரின் தானமே
வழங்கி நின்றதும் எண்ணூரின் தானமே. (90)

## காட்சி.

### கைக்கிளை மருட்பா.

தாதரும்புஞ் சோலை தவழெண்ணூர்ப் பொன்மலைமேல்
போதரும்புந் தீந்தேன் பொதும்பரின்கீழ்—சீதக்
கரும்புயல் சுமந்து பெரும்பிறை யணிந்து
குமிழ்மிசை மறிந்து குழையெதிர் நடந்து
இருகணை தொடுத்த இருசிலை புனைந்து
வள்ளையும் பவள வள்ளமு முத்தும்
அமைந்த கஞ்சமுஞ் சுமந்த சங்கமும்

இருபசுங் கழையும் இருபசுங் காந்தளும்
சுமந்ததோர் பொற்கொடி அமர்ந்திரு கமலமேல்
நின்றது கற்பக நீழலி னருகே
வியப்பிது என்னே விளங்கு மாறே. (91)

## கட்டளைக் கலித்துறை.

ஆறிருந் தம்பொன் மணிசீக்கு யெண்ணூர் அருந்தவனே!
மாறிருந் தைவர் பதிவிருந் தென்றனை வாட்டுகின்றார்
வேறிருந் தஞ்சொன் மடவாருஞ் சேர்ந்து விரட்டுகின்றார்
தேறிருஞ் சோலைத் தனிமரந் தோப்பெனச் சேர்வரிதே. (92)

## வெண் கலிப்பா.

சேல்செய்த மதர்விழியார் சிலைசெய்த நுதலழகார்
மால்செய்த குழலுடையார் மணியாங்க நிரைதோறும்
புரிமுறுக்கி னிசைநரம்பேழ் புதக்கியயாழ் விரலுளறச்
சுரிமுகத்தின் குரலெடுத்துத் தொனித்தபல சுரப்பாடல்
அருகிருந்த புதுப்பூவை அமிழ்தயின்று தமிழ்பயில
முருகிருந்த வரவிந்த முகைவிரியு மணமணக்கும்
திருவெண்ணூர்த்திருக்கோயில் திருவடியான் திருவடியார்க்
கருள்வாங்க னினைத்தென்ன எவர்மனத்தா னினைவாரே. (93)

## நேரிசை வெண்பா.

நினையாப் பிழையும் நினதடியை நாளும்
புனையாப் பிழையும் புதுமை—தனையெடுத்துச்
சொல்லாப் பிழையினையுஞ் சூழ்ந்தெண்ணூராய் பொறுப்பாய்
எல்லாப் பிழையும் இனிது. (94)

## இரங்கல் தாழிசை.

இனியாது சொல்வன்? இனியாது என்சொல்
இனிமேலும் நம்பலழகோ?
கனியாது நின்ற மரமீது கற்கள்
கலவாது என்பரறிஞர்
முனியாது இன்னும் மொழிகூறிலென்னை
முனியாத பேருமுளரோ?
தனியாக எண்ணூர் வழிபோக வென்னில்
தகுமான பருவமிலையே. (95)

### எண்சீராசிரிய விருத்தம்.

இயலொன்று பலகலைகள் தெரிந்தாரேனும்
இனியகவி மழைபுரையப் பொழிந்தாரேனும்
மயலொன்று பொருள்கோடி படைத்தாரேனும்
மகுடமுடி சூடியுல காண்டாரேனும்
கயலொன்று புயல்பாய்ந்து மடையுடைத்துக்
கமலவிதழ்த் தோடரித்துக் கமழுந்தெய்வ
வயலொன்று மெண்ணூர்வாழ் பெரியோன்றன்னை
வணங்காரைப் பொருளென்று மதித்திடோமால். (96)

### நேரிசை வெண்பா.

மதிக்குடையா யெண்ணூராய் வாழ்விக்கு மன்பர்
துதிக்குடையாய் வானோர் சுகிக்கும்—பதிக்குடையாய்
பாடினே னுன்னைப் பணிந்தே னெனைக்காக்கச்
சூடினே னுன்மலர்த்தாட் சூட்டு. (97)

### எண்சீராசிரிய விருத்தம்.

சூசையென்போன் முன்னொருவன் பார்வோன்கண்ட
சொப்பனத்தி லபலாபலனைச் சொன்னதாலே
ஆசையுடன் வேந்தவனைத் தனதுநாட்டுக்
கதிபதியாக் கிப்பெருமை யளித்தாற்போலச்
சூசையெனு நீதெய்வ மகற்குந் தாய்க்குந்
துணைபுரிந்த தாலுனக்கே தூயநாதன்
காசினியை முழுதாளும் பெருமைதந்த
காரணத்தை யுன்னிலது களிக்கும் பேறே. (98)

### நேரிசை வெண்பா.

பேர்பெற்றான் சூசை பெருகுவளத் தெண்ணூரென்
னூர்பெற்றான் தேவசுத னோர்மகனுஞ்—சீர்பெற்றான்
உற்றான் மலர்க்கொடியோ டோர்கொடியை யென்னிலெவர்
பெற்றா ரிவன் பெற்ற பேறு. (99)

### நிலமண்டில ஆசிரியப்பா.

இமிர்தருவயலிற் றவழ்பெருஞ் சங்கம்
ஈன்ற வெண்டரளங் கான்றவெள் ளொளியால்
ஆம்பல் வாயவிழ்ந்த தேம்புனல் பரந்து
செந்நெல் விளைக்குந் திருத்தகு நன்று

டெசித்தினிற்பஞ்ச மேழுவருடமாய்
வருத்தவே யுயிர்கள் வதைவது கண்டு
மன்னவன் பார்வோன் வழங்கிய மேன்மையால்
அருண்மடை திறந்த தனையசெங் கண்ணன்
முன்னொரு சூசை முறை முறையாக
படியளந் துயிர்களைப் பாதுகாத்ததுபோல்
பின்னொரு சூசை நீபிறந்ததனல்
பற்பல வகையிற் பரவியபஞ்சப்
பாப்பினி லடியார் படுந்துயர்க் கிரங்கி
அத்தனேயுனக்கு அருளிய வரத்தால்
இத்ததி காக்கவென் றெண்ணியே யெண்ணூர்
வந்தனமெங்கள் மனக்குறை தீர்ப்பாய்
சந்தத முனக்கே சரண்புகுந் தனமே. (100)

நேரிசை வெண்பா.

சரணம் புகுந்தாரைத் தாபரிக்கு மெண்ணூர்க்
கருணை யுடையானைக் கண்டால்—அரணியபல்
பத்திவரும் புத்திவரும் பன்னு கலைஞான
சித்திவரும் எந்நாளுஞ் சேர்ந்து (101)

கட்டளைக் கலித்துறை.

சேவிக்கும் வானவர் கொண்டாடு மெண்ணூர்த் திருத்தகைமேல்
பாவிக்குட்பாவியேன் சொன்னேன் கலம்பகப் பாட்டெனது
ஆவிக்குள் சேசு மரி சூசை மூவர் அமர்ந்திருக்க
மேவிக்கண் மூடுஞ் சரமதசையில்வான் வீடுறவே. (102)

முற்றிற்று

1/6367

# புஸ்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| புராந்திம பச்சிம காண்டங்களின் விலை | 1 | 8 | 0 |
| தபாற்கூலி | 0 | 4 | 0 |
| அர்ச். சூசையப்பர் கலம்பகம் | 0 | 1 | 0 |
| தபாற்கூலி | 0 | 0 | 6 |
| திறக்கப்பட்ட நரகம் | 0 | 3 | 0 |
| தபாற்கூலி | 0 | 0 | 6 |

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

"நல்ல ஆயன்" அச்சாபீஸ் மானேஜர்,
அர்ச் சவேரியார் கோவில்,
ஜார்ஜ்டவுன் மதிராஸ்.

அல்லது

ம-ா-ா-ஸ்ரீ ஆ. சூசை. அண்ணாதுரை,
6. அப்பாவுபிள்ளை சந்து,
ஆரத்தூன் ரோட்-இராயபுரம்,
மதிராஸ்.

1A
1-116